23

# யோவான் ஸ்நானனும் இயேசுவும்

## (11:1–19)

*அடுத்து மத்தேயு, இயேசுவின் போதனை மற்றும் செயல்களுக்கு மக்கள் செய்திருந்த பதில்செயல்கள் மீது கவனம் குவித்தார். இந்த பதில் செயல்கள் அடிக்கடி சாதகமற்றவைகளாக இருந்தன. யோவான் ஸ்நானன் கூடக் கர்த்தரைக் கேள்வி கேட்டிருந்தார்.[1] மத்தேயு, யோவான் மற்றும் இயேசு ஆகியோரைப் பற்றிக் கலந்துரையாடிய பின்பு (11:1-19), மனந்திரும்பாத நகரங்களுக்கு இயேசுவின் கண்டனத்தை அறிக்கையிட்டார் (11:20-24), இயேசுவின் ஜெபத்தைப் பதிவு செய்தார் மற்றும் அதன் பின்பு அவர், இயேசுவினிடம் வரும்படி எல்லாருக்குமான இயேசுவின் மாபெரும் அழைப்பைச் சித்தரித்தார் (11:25-30).*

### *யோவானின் கேள்வி (11:1-3)*

***[1]இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.***

***[2]அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டு பேரை அழைத்து:***

***[3]வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.***

***வசனம் 1.*** *இந்த வார்த்தைகளைக் கொண்டு, இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்திருந்தார் என்று மத்தேயு சுட்டிக்காண்பித்தார். இவ்வாறு செய்தபின்பு இயேசு, 11 மற்றும் 12ம் அதிகாரங்களில், மற்றவர்களுடனான தமது உரையாடலைத் தொடங்கினார். ஜேக் P. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *1228ல் ஸ்டீபன் லேங்ட்டன் அவர்களால் தரப்பட்ட, 10 மற்றும் 11ம் அதிகாரங்களுக்கு இடையிலான பிரிவானது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது, ஏனெனில் 1ம் வசனமானது உண்மையில் 10ம் அதிகாரத்தின் முடிவுரையை வடிவமைக்கிறது. இது, மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள போதனைப் பகுதிகளின் முடிவுரையை வடிவமைக்கும் ஐந்து வாக்கியங்களில் இரண்டாவதாக உள்ளது (ஒப்பிடுக 7:28f.; 13:53; 19:1; 26:1).[2]*

11:1ல் உள்ள "தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும்" என்பதற்கான குறிப்பு, 10:1ல் உள்ள குறிப்புக்கு இணையாக உள்ளது, இது 10ம் அதிகாரத்திற்குப் புத்தக முடிவுரையாகத் தரவழைக்கப் பட்டுள்ளது.

மத்தேயு வெளிப்படையாக உண்மையை உரைக்கவில்லை என்றாலும், சீஷர்கள் புறப்பட்டுச் சென்றபின்பு, அவர்கள் தாங்கள் செய்யும்படி இயேசு தங்களுக்கு அதிகாரம் அளித்திருந்தவற்றைச் செய்யச் சென்றனர் (மாற்கு 6:12, 13; லூக்கா 9:6). குறைந்த பட்சம் சற்றுக்காலத்திற்காவது, **இயேசு** தனிமையில் ஊழியம் செய்திருந்ததாகக் காணப்படுகிறது. ஒருவேளை அவர், சீஷர்களின் பாதைகளைப் பின்பற்றி இருக்கலாம் (10:23ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

**அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்** என்பதும் இதைப்போன்ற மற்ற சொற்றொடர்களும், மத்தேயு சுவிசேஷத்தில் இணைப்புச் சொற்றொடர்களாகப் பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றன (12:9; 13:53; 15:29; 19:1). அவருடைய **நகரங்களில் உபதேசித்தல் மற்றும் பிரசங்கித்தல்** என்பதே இயேசு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டதற்கான நோக்கமாக இருந்தது (4:23; 9:35 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). "உபதேசித்தல்" மற்றும் "பிரசங்கித்தல்" என்பது ஒன்று போன்றவையாக இருக்கும் அதே வேளையில் அவைகள் மாறுபட்டவையாகவும் இருக்கலாம். "பிரசங்கித்தல்" என்பது தேவனுடைய வசனத்தை அளிவித்தலாக இருத்தல் அவசியம் என்றிருக்கையில், "உபதேசித்தல்" என்பது அதிக விபரமான விளக்கங்களைக் கொடுத்தல் என்பதை உள்ளடக்கியிருக்கிறது. "குணமாக்குதல்" என்பது இந்தத் தொகுப்புரையில் இல்லாதிருத்தல் கவனிக்கத் தக்கதாக உள்ளது.

**வசனம் 2. யோவான் சிறையில் அடைக்கப்பட்ட** விஷயம் மத்தேயு சுவிசேஷத்தில் மூன்று முறை குறிப்பிடப்படுகிறது (4:12; 11:2; 14:3). யோசிப்பஸ் அவர்களின் கருத்துப்படி, ஏரோது அந்திப்பா, யோவான் ஸ்நானனை, சவக்கடலின் கிழக்குப்பகுதியில் இருந்த, தெற்கு பெரேயாவின் மக்காருஸ் (அல்லது மக்கெருஸ்) கோட்டையில் சிறைவைத்திருந்தார்.[3] இது பெரிய ஏரோதுவினால் பிடிக்கப் பட்டிருந்த பல கோட்டைகளில் ஒன்றாக இருந்தது. இது பலஸ்தீன நாட்டின் கிழக்கு எல்லைப் பகுதியை காவல் செய்யப் பயன்படுத்தப்பட்டது. மைக்கேல் J. வில்க்கின்ஸ் அவர்கள் "இந்தக் கோட்டையின் பெயர், 'குறுவாள்' என்று அர்த்தப்படும் *machaira* என்ற வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டிருக்கலாம் மற்றும் இது கடல் மட்டத்தில் இருந்து எழுநூறு மீட்டர் (1,600 அடிகள்) உயரத்திற்கு செங்குத்தான பக்கங்களைக் கொண்டுள்ள பாறையால் ஆன மலையின் மீது கட்டப்பட்டிருந்தது, இம்மலை மூன்று பக்கங்களிலும் ஆழமான கணவாய்களால் பாதுகாக்கப்பட்டிருந்தது" என்று எழுதினார்.[4]

அரசருக்கும் அவரது மைத்துனி ஏரோதியாளுக்கும் இடையில் நடைபெற்றிருந்த ஒழுக்கவீனமான திருமணத்தை யோவான் தைரியமாகப் பழித்துரைத்தபடியால், அவர் சிறையில் அடைக்கப்பட்டார் (லூக்கா 3:19, 20; காண்க லேவியராகமம் 18:16). அவள் அவரது அரைசகோதரரான அரிஸ்டோபுலுவின் மகள் என்ற வகையில், அவருக்குத் தங்கை முறைகொண்டவளாக இருந்தாள், மற்றும் அவள் அவரது சகோதரரான

*ஏரோது பிலிப்புவுக்குத் திருமணம் செய்துகொடுக்கப்பட்டிருந்தாள். ரோமாபுரி செல்லும் ஒரு பயணத்தின்போது, ஏரோது அந்திப்பா அவள்மீது மோகம் கொண்டு, அவளைத் தன் இச்சைக்கு இணங்கும்படி கெடுத்து, பின்பு இல்லம் திரும்பியபோது, உடனடியாகத் தமது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, ஏரோதியாளைத் திருமணம் செய்துகொண்டார். மக்களுக்காகப் பயம் இல்லாதிருந்தால், ஏரோது ஏற்கனவே யோவானுக்கு மரண தண்டனை கொடுத்திருப்பார் (14:5).*

*யோவானின் **சீஷர்களில்** சிலர் இயேசுவின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அதை யோவானிடத்திற்கு வந்து அறிக்கை செய்தனர் என்பது உறுதி. இயேசுவைச் சந்தித்தபோது அவர்கள் (9:14), உபவாசித்தல் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டிருந்தனர். இத்துடன் கூடுதலாக, இயேசு நாயீன் நகரத்தில் விதவை ஒருத்தியின் மகனை உயிரோடு எழுப்பிய பின்பு, "இவைகளையெல்லாம் யோவானுடைய சீஷர்கள் அவனுக்கு அறிவித்தார்கள்" (லூக்கா 7:18). **கிறிஸ்துவின் கிரியைகளைப்பற்றிக்** கேள்விப்பட்ட யோவான், அவர் கிறிஸ்துதானா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகத் தமது சீஷர்களில் ஒரு குழுவினரை அனுப்பும்படி தூண்டப்பட்டார்.*

***வசனம் 3.** யோவானின் செய்தி பின்வருமாறு இருந்தது: **வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா?** இயேசு யார் என்று யோவான் அறிந்திருந்தார், ஏனெனில் அவர்கள் இருவரும் உறவினர்களாக இருந்தனர் (லூக்கா 1:36). அவரை "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் அறிக்கை இட்டிருந்தார் மற்றும் ஆவியானவர் "புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி" வந்து அவர்மீது தங்கியதை யோவான் கண்டார் (யோவான் 1:32). இயேசுவைப் பற்றி யோவான், "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்றும் அறிவித்திருந்தார் (யோவான் 3:30). பின்பு ஏன் யோவான் இப்போது சந்தேகங்கள் கொண்டவராகக் காணப்பட்டார்?*

*பல சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன. ஒருவேளை, யோவானுக்காக இன்றி அவரது சீஷர்களின் பயனுக்காக இந்தக் கேள்வி எழுப்பப் பட்டிருக்கலாம். இயேசுவின் சீஷர்களுடன் இணைந்து கொள்ளுதலைத் தேர்ந்துகொள்ளாமல் யோவானுடனேயே தொடர்ந்து இருக்க விரும்பிய யோவானுடைய சீஷர்களில் சிலர், இயேசு யார் என்று கேள்வி எழுப்பி இருந்திருக்கலாம். மற்றவர்கள் இது - யோவான் தமது வனாந்தரப் பிரசங்கித்தல்களில் தாம் முன்னுரைத்திருந்தவற்றை இயேசு எப்போது செயலுக்குக் கொண்டுவருவார் என்பதை அறிய விரும்பியதால் ஏற்பட்ட - பொறுமையின்மையின் கேள்வி என்று நினைத்துள்ளனர் (3:7-12). யோவான் தாம் ஏற்கனவே விசுவாசித்திருந்ததை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம் என்ற இன்னொரு கண்ணோட்டமும் உள்ளது.*

*யோவானின் சூழ்நிலையைப் பற்றிய மிகச் சிறந்த விளக்கம் இங்குள்ளது. ஏரோது அந்திப்பாவின் முறைகேடான திருமணம் பற்றி வெளிப்படையாகக் கண்டனம் செய்கையில் யோவான், சத்தியத்தைப் பிரசங்கித்தலில் பயமற்றவராகவும் உண்மையுள்ளவராகவும் இருந்தார் மற்றும் அதற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார். வரவிருந்தவருக்கு வழியை ஆயத்தம் செய்வதில் தாம் சரியானதைச் செய்திருந்தாரா என்பது பற்றிய கணநேர சந்தேகத்தை அவர்*

*கொண்டிருந்து மறு உறுதிப்பாடு தேவைப்பட்டவராக இருந்திருக்கலாம்.*

*"எதிர்பார்க்கப்பட்ட ஒருவர்" அல்லது "வரவிருந்த ஒருவர்" என்பது மேசியாவுக்குப் பயன்படுத்தப்பட்ட பட்டப்பெயராக இருந்தது, ஏனெனில் அவரது வருகை இஸ்ரவேல் மக்களால் நீண்டகாலமாக எதிர்பார்க்கப் பட்டிருந்தது (சங்கீதம் 118:26). இந்தச் சொற்றொடர் பெரும்பான்மையான யூதர்களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்திருக்கும் (மத்தேயு 3:11; 21:9; 23:39; யோவான் 4:25; 6:14; 11:27; 12:13).*

## *இயேசுவின் பதில் (11:4-6)*

***4இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக:நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்;***

***5குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.***

***6என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.***

***வசனம் 4.*** *யோவானின் சீஷர்களுக்கு இயேசு, வெறுமனே "ஆம்" அல்லது "இல்லை" என்று பதில் அளிக்கவில்லை. அதற்குப்பதிலாக அவர், தெளிவாய்ப் புரியக்கூடிய சான்றை அளித்தார். லூக்கா, "அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர்குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார்" என்று பதிவு செய்தார் (லூக்கா 7:21). பின்பு யோவானின் சீஷர்களிடம் இயேசு,* ***நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்*** *என்று கூறினார். "கேட்கிறதையும் காண்கிறதையும்" என்ற சொல் வரிசை அமைப்பு, மத்தேயு தமது சுவிசேஷத்தில் பயன்படுத்திய மாதிரியைப் பிரதிபலிக்கிறது. முதலாவது அவர், 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களில் இயேசுவின் போதனைகளை ("கேட்கிறது") அறிக்கை செய்தார், அதைத் தொடர்ந்து 8 மற்றும் 9 ஆகிய அதிகாரங்களில் அவர், இயேசுவின் அற்புதங்களைப் பற்றி ("காண்கிறது") அறிக்கை செய்தார்.[5] லூக்கா 7:22ம் வசனம் "கண்டவைகளையும் கேட்டவைகளையும்" என்ற சொற்றொடரைக் கொண்டு வரிசைமுறையை மாற்றியமைக்கிறது.*

***வசனம் 5.*** *யோவானின் சீஷர்கள் இருக்கையில் இயேசு நிகழ்த்திய அற்புதங்கள், மேசியா வரும்போது அவர் செய்வார் என்பதாக ஏசாயா முன்னு ரைத்திருந்த செயல்களாக இருந்தன (ஏசாயா 29:18, 19; 35:5, 6; 61:1). இந்த அற்புதங்கள் மூன்று ஜோடிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன, மற்றும் இவைகள் மத்தேயு 8ம் மற்றும் 9ம் அதிகாரங்களில் இருந்து விவரிக்கப்பட முடியும்: (1)* ***குருடர் பார்வையடைகிறார்கள்*** *(9:27-31) மற்றும்* ***சப்பாணிகள் நடக்கிறார்கள்*** *(8:5-13; 9:2-8); (2)* ***குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்*** *(8:1-4) மற்றும்* ***செவிடர் கேட்கிறார்கள்*** *(காண்க 9:32-34); (3)* ***மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்*** *(9:18-26) மற்றும்* ***தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது*** *(9:35). இயேசுவுக்கு நேரெதிரிடையாக யோவான் தமது*

*ஊழியத்தின்போது எந்த அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை (யோவான் 10:41).*

***வசனம் 6.*** *இயேசு தமது பதிலை ஒரு பாக்கியத்துடன் முடித்தார்:* ***என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்.*** *"இடறலடைதல்" என்பதற்கான (skandalizō) கிரேக்க வினைச்சொல், "இடறுதலுக்கான கல்" (skandalon) என்ற பெயர்ச்சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், யோவான் இயேசுவின் மீது கொண்டுள்ள தமது நம்பிக்கைக்கு, தமது முன் அனுமானிக்கப்பட்ட மேசியாத்துவ எதிர்பார்ப்புகளை விட்டுவிட்டு, அதைத் தமக்கு இடறுதலுக்கு ஏதுவான கல்லாக அனுமதித்து விடக்கூடாது.*[6]

*பல மக்கள், இயேசு யாராக இருந்தார் அல்லது அவர் என்ன செய்தார் என்பதன் காரணமாக அவரைப் புறக்கணித்திருந்தனர். சில சீஷர்கள், அவரது கடினமான உபதேசத்தினால் இடறல் அடைந்து அவரைப் பின்பற்றுவதை விட்டொழித்தும் இருந்தனர் (யோவான் 6:60, 61, 66). அவரது சொந்த ஊரான நாசரேத்தூரில் இருந்தவர்கள், இயேசுவைக் குறித்து "இடறல் அடைந்தனர்." அவர் போதனையைக் கேட்டவர்கள், "இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?" என்று கேட்டனர் (13:54). சிலுவையைப் பற்றிய உபதேசம் யூதர்களுக்கு "இடறுதலுக்கான கல்லாக" இருந்தது என்று பவுல் எழுதினார், ஏனெனில் சிலுவையில் அறையப்பட்ட மேசியாவின் உண்மை நிலையைப் பலர் ஏற்றுக்கொள்ள இயலாதிருந்தனர் (1 கொரிந்தியர் 1:23; கலாத்தியர் 5:11).*

## *யோவானைப் பற்றிய இயேசுவின் பாராட்டுரை (11:7-15)*

***7அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?***

***8அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள்.***

***9அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***10அதெப்படியெனில்: இதோ நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.***

***11ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.***

***12யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம்***

***பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துகொள்ளுகிறார்.***

[13]***நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.***

[14]***நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்.***

[15]***கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.***

***வசனம் 7.*** *இயேசுவின் பதிலைப் பெற்றபின்பு, யோவானிடமிருந்து வந்த இந்தச் செய்தியாளர்கள் காட்சியை விட்டு அகன்றனர். பின்பு, மக்கள் கூட்டத்திடம் திரும்பி அவர்களிடம்,* ***எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?*** *என்று கேட்டார். யூதர்களில் திரளானவர்கள், யோவான் பிரசங்கித்ததைக் கேட்கவும் அவரிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும், கரடு முரடான பகுதியில் பல மைல்கள் பயணம் செய்திருந்தனர் (3:5, 6). யோவான், மாறும் காற்றிற்கேற்ப ஊசலாடுகிற, காற்றில் அசையும் நாணலாக இருக்கவில்லை என்பது தெளிவு. அதற்குப்பதிலாக யோவான், உறுதிப்பாடும் தைரியமும் உள்ள மனிதராக இருந்தார். அவர் பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் மாய்மாலத்திற்காக அவர்களைத் தைரியமாய்க் கடிந்து கொண்டார் (3:7-10). மேலும் அவர், ஏரோது அந்திப்பாவின் சட்டவிரோதமான திருமணத்திற்காக அவரை எதிர்த்து நின்றார். அதனால்தான் அவர் சிறையில் அடைக்கப்பட்டார் (14:3-5).*

***வசனம் 8.*** *அடுத்து இயேசு, மக்கள்* ***மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனை சந்திப்பதற்காக*** *வனாந்தரத்திற்குப் பயணம் செய்திருந்தனரா என்று அவர்ளைக் கேட்டார். "மெல்லிய வஸ்திரம்" (malakos) என்பது, "விலையுயர்ந்த உடைகள்" (NLT), "நாகரீகமான உடைகள்" (TEV) மற்றும் "பட்டுகள் மற்றும் சாட்டின் துணிகள்" (NEB). என்று பலவகையில் சொற்றொடராக்கப்பட்டுள்ளது. மீண்டுமாக இந்தக் கேள்விக்கு, "இல்லை" என்பதே தெளிவான பதிலாக இருந்தது. அதற்குப் பதிலாக யோவான், "ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தார்" (3:4). அவரது உடை தீர்க்கதரிசிக்கு உரியதாக இருந்தது (2 இராஜாக்கள் 1:8; சகரியா 13:4) மற்றும் அது ஏழைகளுக்கு உரியதாக இருந்தது.[7]*

*பின்பு இயேசு,* ***மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள்*** *என்று குறிப்பிட்டார். இப்படிப்பட்ட மக்களில், தங்கள் சுய மேன்மைக்கென்று அறியப்பட்ட அரசர்களும், அவர்களைப் பொய்யாகப் புகழும் மற்றும் அவர்களின் நடத்தைக்கு உடன்படுதல் ஆகியவற்றிற்கென்று அறியப்பட்ட அரச அரண்மனைகளில் இருந்தவர்களும் உள்ளடங்கியிருந்தனர். இந்தப் பண்புகள் யோவான் எதிர்த்து நின்ற விஷயங்களாக இருந்தன.*

***வசனங்கள் 9, 10.*** *இயேசு தமது கேள்விகளின் மூன்றாவது வரிசையில்,* ***அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ?*** *என்று கேட்டார். இந்த விஷயத்தில் பதில் உடன்பாடாக இருந்தது. யோவான்* ***ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார்,*** *ஆனால் அவர்* ***அதைக் காட்டிலும் மேன்மையுள்ளவராக இருந்தார்.***

*மல்கியாவின் செயல்விளக்கத்தில் இருந்து இயேசுவின் மேற்கோளின்படி யோவான், தீர்க்கதரிசனம் உரைத்தவராகவும் மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினவராகவும் இருந்தார் (மல்கியா 3:1).*[8] *அவர் வரவிருந்த எலியாவாக இருந்தார் (மல்கியா 4:5; மத்தேயு 11:14).*

*வசனம் 11.* ***இயேசு, ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும்*** *பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று கூறினார். "ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில்" என்பது "மனிதகுலம்" என்பதை மாத்திரம் அர்த்தப்படுத்துகிற எபிரெய மரபுச்சொற்றொடராக உள்ளது (காண்க யோபு 14:1; 15:14; 25:4). அவர் தமது பணிப்பொறுப்பின் உண்மை நெறியில், வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் மனிதராக இருந்தார் (காண்க லூக்கா 1:15). இயேசு தாமே மேசியாவாக இருந்தார் என்பதால், இந்தக்கூற்றில் அவர் விலக்கப்பட்டுள்ளார், அவருடைய பிறப்பு அற்புதமான வகையில் கர்ப்பம் தரிக்கப்பட்டதன் விளைவாக இருந்தாலும், அவரும்கூட "ஸ்திரீயினிடத்திற் பிறந்தவராக" (கலாத்தியர் 4:4) இருந்தார் (1:20ன் மீதான விளக்கங்களைக் காணவும்).*

*தொடர்ந்து இயேசு,* ***ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன்***[9] ***அவனிலும் பெரியவனாயிருக்கிறான் என்று கூறினார்.*** *இது எவ்வாறு முடியும்? பரலோக இராஜ்யம் சமீபித்து இருக்கிறது என்று யோவான் பிரசங்கித்தார் என்றாலும், அவர் ஒருக்காலும் இராஜ்யத்தின் குடிமகனாக இருக்கவில்லை. பெந்தெகொஸ்தே நாளன்று அது நிலைநாட்டப்படுவதற்கு முன்பாகவே அவர் மரித்தார். யோவான் மகிழ்வுடன் அனுபவித்தவற்றைப் பார்க்கிலும் மாபெரும் ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் கிறிஸ்தவ யூகம் கொண்டுள்ளது.*[10]

*வசனம் 12.* ***யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது.*** *"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் இயேசுவின் ஊழியக்காலம் வரைக்கும்" நிலவியிராத ஒரு ராஜ்யம் எவ்வாறு பலவந்தம் பண்ணப்பட முடிந்தது? இராஜ்யம் அப்போது வராதிருப்பினும், அது தனது ஆயத்த நிலையில் இருந்தது. "யோவான்ஸ்நானன் காலமுதல்" என்பது அவரது வெளிப்படையான ஊழியத்தைக் குறிக்கிறது. யோவானின் செய்தியானது எதிர்ப்புடன் சந்தித்திருந்தது, மற்றும் அவரது வாழ்வு பொல்லாத மனிதர்களின் கையினால் விரைவில் முடியவிருந்தது (14:3-12). அப்போஸ்தலர்களின் செய்திக்கு, அவர்களில் சிலர் பெறவிருந்த வன்முறையான பதில்செய்கைகள் குறித்து அவர்களை இயேசு எச்சரித்திருந்தார் (10:16-20). அவரது சொந்த ஊழியம் வன்முறையான எதிர்ப்பைக் கொண்டுவந்து அவரது மரணத்தில் முடிவுற்றது (26:55-57, 65-68; 27:26, 30, 33-35, 50).*

*இவ்வசனத்தின் பகுதிகள், விளக்கியுரைக்கக் கடினமானவையாக உள்ளது. "பலவந்தம் பண்ணுகிறவர்கள்" (biazō என்பதில் இருந்து வந்துள்ள) என்பது செயப்பாட்டு வினையாகவோ அல்லது நடுநிலை வினையாகவோ மொழிபெயர்க்கப்பட முடியும். இது செயப்பாட்டு வினையாகக் காணப்படுகிறது என்றால் ("பலவந்தம் பண்ணுகிறவர்கள்"), இது யோவான் மற்றும் இயேசுவை மக்கள் எதிர்த்த போது நடைபெற்ற விஷயங்கள் போன்று, புறம்பேயிருந்து இராஜ்யத்திற்கு எதிரான வன்முறை கொணரப்படுகிறது*

என்று அர்த்தமாகிறது. இது நடுநிலை வினையாக வாசிக்கப்பட்டால் (“பலவந்தமாக வருகிறது”), இராஜ்யமானது அறிமுகப்படுத்தப்படும் வேளையிலும்கூட, மனிதர்கள் அதற்குள் பலவந்தமாக நுழைவார்கள் என்று அர்த்தப்படுகிறது.

இந்த இரண்டாவது காட்சி, இராஜ்யத்தை “முற்றுகையின்கீழ் உள்ள ஒரு நகரம்” என்ற வகையில் சித்தரிக்கிறது, இதில் மனிதர்கள் அந்த நகரத்தின் மதில்களைத் தகர்த்து நுழைய பலவந்தமாக வழிதேடுகின்றனர். தவறாகப் புரிந்துகொள்ளப் பட்டாலும், இராஜ்யம் என்பது மாபெரும் ஆவலுடன் வரவேற்கப்பட்டது. சிலர் இதன் அவசர வாயில் வழியாக நுழைய முயற்சி செய்தனர்; மற்றவர்கள் இதனுள் முதன்மையிடத்தைப் பெறத் தங்களுக்கு வழியை ஏற்படுத்த விரும்பினர் (20:21; லூக்கா 16:16; 19:11; 22:24-30; யோவான் 6:15; நடபடிகள் 1:6). இந்த விளக்கங்களில் முதலாவது எதிர்மறையானதாகவும் இரண்டாவது நேர்மறையானதாகவும் உள்ளது. இராஜ்யம் பலவந்தமாக வரும் என்பது இதன் அர்த்தமாக இருக்கலாம்.

**வசனம் 13.** இந்த இடத்தில் இயேசு, பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையில் **யோவான்** நிறைவேற்றிய மாறுதல் பணிப்பொறுப்பை வலியுறுத்தினார். **நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளும்** என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதன் மூலம், அவர் வழக்கமான “தீர்க்கதரிசிகளும் நியாயப்பிரமாணமும்” என்ற வரிசை முறைமையை மாற்றியமைத்தார் (காண்க 5:17; 7:12; 22:40). இது யோவான், தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தார் என்பதை அடிக்கோடிடுவதற்காகச் செய்யப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. தீர்க்கதரிசிகளின் குரல்கள் ஏறக்குறைய நானூற்று ஆண்டுகளாக இல்லாது அமைதியாயிருந்தன. பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசியான மல்கியா, யோவானின் வருகையைப் பற்றி முன்னுரைத்திருந்தார் (11:9, 10ன் மீதான விளக்கங்களைக் காணவும்). தொகுத்துப் பார்த்தால் இந்தத் தீர்க்கதரிசிகள், யோவானுடைய வருகையைச் சுற்றி நடந்த விஷயங்களைச் சுட்டிக்காண்பித்தனர். அவர் “கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருந்தார்” (3:3; காண்க ஏசாயா 40:3). யோவான் மற்றும் அவரைத் தொடர்ந்து வந்த ஒருவர் (இயேசு) ஆகியோரின் வருகையுடன், அந்தத் தீர்க்கதரிசனங்கள் யாவையும் நிறைவேற்றப்படும். நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும், வரவிருந்த இராஜ்யத்தையும் முன்னுரைத்தன (தானியேல் 2:44), அது “சமீபித்திருந்தது” என்று யோவானும் இயேசுவும் அறிவித்தனர் (3:2; 4:17).

**வசனம் 14. வருகிறவனாகிய எலியா** இவன்தான் என்று இயேசு, யோவானை அடையாளப்படுத்தினார். இது மல்கியா 4:5ல் கூறப்பட்ட பின்வரும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது: “இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.” இந்தத் தீர்க்கசரிசனம் மற்றும் எலியா சரீரப்பிரகாரமான மரணம் அடையவில்லை (2 இராஜாக்கள் 2:11, 12) என்ற உண்மை ஆகிய இரண்டும் சேர்ந்து, அவர் பூமிக்கு நேர்ப்பொருளில் திரும்பவும் வருவார் என்று யூதர்கள் எதிர்பார்க்கும்படி செய்தன.[11] யோவான், தாம் எலியா அல்ல என்று மறுத்துரைத்திருந்தார் (யோவான் 1:21), ஆனால்

*அவரை, மல்கியா தீர்க்கதரிசனமாக உரைத்திருந்த "எலியா" என்று இயேசு அடையாளப்படுத்தினார் (காண்க 17:10-13; மாற்கு 9:11-13). யோவான் "எலியாவின் ஆவியும் பலமும் உடையவராக" வந்தார் (லூக்கா 1:17).*

*யோவான் "எலியாவாக" இருந்தார் என்பதை ஒவ்வொருவரும்* ***ஏற்றுக்கொள்ள விரும்பமாட்டார்கள்*** *என்பதை இயேசு உணர்ந்திருந்தார். நேர்ப்பொருளில் எலியா திரும்பி வருதல் பற்றி அவர்கள் கொண்டிருந்த முன்கணிப்பான கருத்துணர்வுகள், மற்றும் அத்துடன் யோவான் சிறையில் இருந்தார் என்ற உண்மை ஆகியவை இணைந்து, அவர்கள் அவரே எலியா என்பதை ஏற்றுக்கொள்ளுவதைக் கடினமாக்கின. இவைகள் இந்த அடையாளப்படுத்துதலை ஏற்றுக்கொள்வதில் இடறுதலுக்கு ஏதுவான கற்களாக இருந்தன (11:6ன் மீதான விளக்கங்களைக் காணவும்).*

***வசனம் 15.*** *இயேசு தமது உரையைக் கேட்டவர்கள், கவனிக்கும்படியான புத்திமதி ஒன்றுடன் தமது பிரசங்கத்தை முடித்தார்:* ***கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.*** *அவரது சொல்விளக்கம் மற்றும் அவற்றைப் போன்றவை, ஒப்பீட்டு சுவிசேஷங்களிலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் காணப்படுகின்றன (13:9, 43; மாற்கு 4:9, 23; லூக்கா 8:8; 14:35; வெளிப்படுத்தின விசேஷம் 2:7, 11, 17, 29; 3:6, 13, 22; 13:9). ஒருவர் பேசப்படுகிற கேட்கக்கூடிய வார்த்தைகளைக் கேட்பது மாத்திரமல்ல, ஆனால் அவர் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்தின் மூலமாகத் தமது வாழ்வை அவைகள் மாற்றும்படி அனுமதிக்க வேண்டும்.*

## யோவானுக்கும் இயேசுவுக்கும் மக்களின் பதில்செயல் (11:16-19)

***16 இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தைவெளிகளில் உட்கார்ந்து, தங்கள் தோழரைப் பார்த்து:***

***17 உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை என்று குறைசொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.***

***18 எப்படியெனில், யோவான் போஜனபானம்பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசு பிடித்திருக்கிறவன் என்றார்கள்.***

***19 மனுஷகுமாரன் போஜனபானம்பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள். ஆனாலும், ஞானமானது அதின் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்.***

***வசனம் 16.*** *இயேசு,* ***இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்?*** *என்று கேட்டார். "சந்ததி" (genea) என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களைக் குறிக்கிறது. இயேசு தமது காலத்தில் வாழ்ந்தவர்களை, விசேஷமாகத் தம்மைப் புறக்கணித்தவர்களைக் குறிக்க இந்தச் சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்தினார் (12:39, 41, 42, 45; 16:4; 17:17; 23:36; 24:34). இந்த சந்தர்ப்பப் பொருளில் அவர் தமது நாட்களில் வாழ்ந்த மக்களை, விசுவாசத்தில்*

பக்குவமற்றிருந்த **பிள்ளைகளுக்கு** ஒப்பிட்டார். அவர்கள் தங்கள் பெற்றோர் பொருள்களை வாங்கிக் கொண்டிருக்கையில் அல்லது சமூகசெயலில் ஈடுபட்டிருக்கையில், **சந்தைவெளிகளில்** விளையாண்டுகொண்டிருந்த பிள்ளைகளைப் போன்றிருந்தனர்.

***வசனம் 17.*** இப்படிப்பட்ட விளையாட்டுகளை விளையாண்டு கொண்டு, தங்கள் நண்பர்களை அழைத்து அவர்கள் ஒத்துழைக்காகதற்காக அவர்களை விமர்சித்துக் கொண்டிருந்த பிள்ளைகளின் குழு ஒன்றை இயேசு சித்தரித்தார். சந்தோஷமான ஒரு **திருமண வைபவத்தில் குழல் ஊதப்படும்போது,** ஒத்துழைக்காத அந்த நண்பர்கள், அவர்களுடன் இணைந்து **கூத்தாடவில்லை.** அவர்கள் விளையாட்டைத் தொடங்கி **சவ அடக்கப் புலம்பல்** ஒன்றைப் பாடத்தொடங்கியபோது, இந்த நண்பர்கள் அதில் பங்கேற்கவில்லை அதாவது அவர்கள் **புலம்பவில்லை.** யாரேனும் ஒருவர் இறக்கும்போது தொழில் முறைப் புலம்புபவர்களாயிருந்த பெண்கள் அடிக்கடி கூலிக்கு அமர்த்தப்பட்டனர் (9:23ன் மீதான விளக்கங்களைக் காணவும்). மற்றும், சவ அடக்க ஊர்வலங்களைக் கடந்து செல்பவர்கள் அங்கு நடைபெறும் புலம்பலில் பங்கேற்கும்படி எதிர்பார்க்கப்பட்டனர்.[12]

அன்றாட வாழ்வில் இருந்து வருகிற இந்தப் பொதுவான விவரிப்பு, யோவானையும் இயேசுவையும் யூதர்கள் ஏற்றுக்கொண்ட வழிமுறையை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் தேவனிடமிருந்து வந்த இந்த செய்தியாளர்களுடன் ஒத்துப்போகவில்லை.

***வசனம் 18. யோவான்*** வந்த காலத்தில் இருந்த யூத சந்ததியார் ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதல் இல்லாதிருந்தனர். அவர்கள் யோவானுடைய வினோதமான மற்றும் விலகியிருந்த வாழ்வு நடையின் காரணமாக அவரைப் புறக்கணித்தனர். யோவான் **போஜனபானம்பண்ணாதவனாய் வந்தார்;** இது அவர் திராட்ச ரசம் குடிக்கவில்லை (லூக்கா 1:15) மற்றும் “வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும்” அவரது உணவாக இருந்தது என்ற உண்மையைக் குறிக்கிறது (3:4). அவர் தமது சீஷர்களுக்கும் உபவாசம் இருக்கும்படி அறிவுறுத்தினார் (9:14). அவரது செய்தியானது மிகவும் கண்டிப்பானதாகவும் தீவிரமாகவும் இருந்ததால் அந்த சந்ததியார் அதைப் புறக்கணித்தனர். அவர்கள் செயலற்றவர்களாக இருக்க அவர் அனுமதிக்கவில்லை, மாறாக மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி அவர் அழைத்தார் (3:2, 6; மாற்கு 1:4). இதன் விளைவாக, அவர்கள் அவரைப் **பிசாசு** பிடித்திருக்கிறவன் என்று குற்றம் சாட்டினர்.[13]

இயேசு தமது காலத்தில் இருந்த சந்ததியாரைப் பற்றிப் பேசியபோது, மார்க்கத் தலைவர்களேயே அவர் தமது சிந்தையில் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தார் என்பதாகக் காணப்படுகிறது. லூக்கா சுவிசேஷத்தில் உள்ள இணைவசனப் பகுதி, யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்த பொது மக்களை (ஆயக்காரர்கள் இதில் உள்ளடங்கினர்) ஞானஸ்நானம் பெற மறுத்திருந்த பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகள் ஆகியோருக்கு நேரெதிராக ஒப்பிடும் ஒரு விளக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ளடக்குகிறது (லூக்கா 7:29, 30; காண்க மத்தேயு 21:32), இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தனர்.

***வசனம் 19.*** அந்த சந்ததியார் இயேசுவையும் புறக்கணித்தனர், இங்கு அவர் **மனுஷகுமாரன்** என்று அடையாளப் படுத்தப்படுகிறார். அவர்

**போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான** மனுஷன் என்று குற்றம் சாட்டப்பட்டார் (காண்க உபாகமம் 21:20).[14] இந்தப்பொய்க் குற்றச்சாட்டுகள், உண்மையை அப்படியே தவறாகப் பிரதிநிதித்துவப் படுத்துபவையாக இருந்தன. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் யூதப் பாரம்பரிய உபவாசங்களில் பங்கேற்பதை இயேசு கட்டளையிடவில்லை (9:14), மற்றும் அவர் தாமே, மக்களின் இல்லங்களில் நடைபெற்ற விருந்துகளிலும் (9:9, 10; 26:6, 7; லூக்கா 7:36; 10:38; 14:1; 19:5) திருமணம் போன்ற மற்ற வைபவங்களிலும் (யோவான் 2:1-11) பங்கேற்கும்படியான அழைப்புகள் பலவற்றை ஏற்றுக்கொண்டார். யோவான் தமது துறவு வாழ்விற்காக விமர்சிக்கப்பட்டிருக்கையில், இயேசு வாழ்வின் பொதுவான நடவடிக்கைகளில் பங்கேற்றதற்காக விமர்சிக்கப்பட்டார்.

இயேசு தமது ஊழியத்தைத் தொடருகையில் தம்முடன் இருக்க அனுமதித்த அவரது தோழர்களுக்காகவும் அவரை அவர்கள் கடிந்துகொண்டனர், அவரை அவர்கள் **ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்** என்று முத்திரை குத்தினர் (9:11ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இப்படிப்பட்ட மக்களை தேவனுக்கு மீளக்கட்டுவதற்கென்றே இவர்களுடன் இயேசு இணைவுகொண்டாரே தவிர, அவர்களின் பொல்லாத செயல்களில் அவர் பங்கேற்பதற்காக இவர்களுடன் அவர் இணைவுகொள்ளவில்லை. இதை லூயிஸ் அவர்கள் "மற்றவர்கள் 'பக்தியுள்ளவர்கள்' என்ற - தனிப்படுத்துபவர்கள் (பரிசேயர்கள்) அல்லது 'வெளிச்சத்தின் பிள்ளைகள்' (எஸ்ஸென்சுகள்), பரிசுத்தமாயிருக்க முயற்சி செய்வதில் எஞ்சியிருந்தவர்கள் - தனிப்பட்ட குழுக்களை உண்டாக்கிக் கொண்டிருக்கையில் இயேசு மக்களிடம் சென்று, அவர்கள் மத்தியிலிருந்த இழந்துபோகப் பட்டவர்களுக்காக ஊழியம் செய்தார்" என்று கூறியதன்மூலம் விளக்கப்படுத்தினார்.[15]

**ஞானமானது அதின் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்** (இவ்விடத்தில் ஆங்கில வேதாகமத்தில் "her deeds" என்றுள்ளது) என்று கூறியதன் மூலம் இயேசு இந்த உரையை நிறைவுசெய்தார். பழைய ஏற்பாட்டின் கூற்றுப்படி, "ஞானம்" (*ophia*) என்பது ஒரு பெண்ணாக நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளது (காண்க நீதிமொழிகள் 8; 9). லூக்கா சுவிசேஷத்தில், "அவளது செயல்கள்" என்பதற்குப் பதிலாக "அதன் பிள்ளைகளினால்" என்றுள்ளது (லூக்கா 7:35). இருப்பினும் சாராம்சத்தில் கருத்து ஒன்றாகவே உள்ளது. மனிதர்கள் யோவானைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் என்ன கூறினாலும், அவர்கள் மனிதர்களை மனந்திரும்பும்படியும் வரவிருந்த இராஜ்யத்திற்கென்று அவர்களை ஆயத்தப்படுத்துதலும் என்ற தேவனுடைய அருளிரக்கமான திட்டத்தில் தங்கள் பணிப்பொறுப்பை நிறைவேற்றினர். அவர்களால் மனமாற்றப்பட்டவர்கள் - இவர்களின் வாழ்வு அடிப்படையில் மாற்றப்பட்டிருந்தது - தங்கள் நடவடிக்கைகளை நீதிக்கு உட்படுத்தினர். பரிசேயர்களும் மற்ற விமர்சகர்களும் தேவனுடைய ஞானத்தை ஏற்றுக்கொள்ளாதபோது, ஆவிக்குரிய வகையில் ஞானமுள்ளவர்கள் இராஜ்யத்தைப் பற்றிய உபதேசத்திற்குத் தங்கள் இருதயங்களைத் திறந்து ஒப்புக்கொடுத்தனர். லூக்கா சுவிசேஷத்தில் ஞானத்தின் "பிள்ளைகள்" என்பவர்கள், சந்தை வெளிகளில் ஒத்துழையாத "பிள்ளைகளுக்கு" நேரெதிராக ஒப்பிடப்பட்டு நின்றனர் (லூக்கா 7:32, 35).

# கிறிஸ்து தமது உபதேசத்தைத் தொடர்ந்தார் (அதிகாரம் 11)

*மத்தேயு 11ல் காணப்படும் ஆறு சத்தியங்கள் இங்கு தரப்படுகின்றன: (1) மாபெருந்தன்மைக்கு இயேசுவின் தர அளவையானது நமது சொந்தத் தர அளவையில் இருந்து பெரிதும் வேறுபடுகிறது (11:1-6). (2) தோற்றங்கள் அடிக்கடி வஞ்சிப்பவையாக உள்ளன (11:7-10). (3) நாம் தேவனுக்கென்று செய்பவற்றை ஒருபோதும் குறைவாக மதிப்பிடக்கூடாது (11:11-15). (4) பெரும்பான்மையான மக்கள் உண்மையான தேவபக்தியை விரும்பவில்லை (11:16-19). (5) கிறிஸ்து நம்மை நியாயந்தீர்ப்பார் (11:20-24). (6) கிறிஸ்து பரிவிரக்கம் உள்ளவராகவும் தம்மிடம் வருபவர்களை மன்னிக்க பெருவிருப்பம் கொண்டவராகவும் இருக்கிறார் (11:25-30).*

## யோவான் ஸ்நானன் (11:2-6)

*யோவான், ஒட்டக மயிராடையில் இருந்த பிரசங்கியார் ஆவார் (3:4). யோவான் ஸ்நானனைப் புரிந்துகொள்வதற்கு நாம், அவரது பின்னணியைப் பற்றிய விஷயங்களை அறிந்திருக்க வேண்டும். அவர் பிறப்பதற்கு முன்னரேகூட விசேஷித்தவராக இருந்தார் (லூக்கா 1:1-25, 41, 57-66). அவர் வெறும் ஆர்வம் உள்ளவராக மாத்திரமல்ல, அவரிடத்தில் இருந்த வினோதமான பண்புகளாக நாம் நினைப்பவை, உண்மையில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் பாரம்பரியத்துடன் அவர் இணைந்திருந்தார் என்பதைக் காட்டுகின்றன (ஏசாயா 40:3-5; மல்கியா 3:1; 4:5, 6). அவரது ஊழியம் பற்றிய விவரிப்பு, அவர் முதலாமவராக அல்ல, ஆனால் இரண்டாமவராகவே இருந்தார் - மணவாளனின் தோழர், மணவாளர் அல்ல - என்று கூறுகிறது (3:11; யோவான் 3:29, 30). அவர் கிறிஸ்து அல்ல (லூக்கா 3:15-17); மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துதல், மக்களின் இருதயங்களை ஆயத்தப்படுத்துதல் மற்றும் ஒளிக்கு சாட்சியம் கொடுத்தல் (யோவான் 1:1-18, 29-34) என்பதே அவரது ஊழியமாக இருந்தது. அவரது செய்தி எளிமையானதாக இருந்தது: "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (3:2). அவர் "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப்" பிரசங்கித்தார் (மாற்கு 1:4) மற்றும் இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கிக்க இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினார் (மாற்கு 1:14, 15). நாம் நமது விசுவாசத்தைத் தீவிரமானதாக எண்ண வேண்டும் என்று யோவான் காண்பித்தார். நாம் "உதட்டளவில் ஊழியத்தை" கொடுப்பதுடன் மனநிறைவு கொண்டுவிடக்கூடாது; நாம் நமது வார்த்தையிலும் செய்கையிலும் கர்த்தரை சேவிக்க வேண்டும்.*

## சந்தேகங்களைக் கையாளுதல் (11:2-6)

*ஏறக்குறைய எல்லாக் கிறிஸ்தவர்களுமே தங்கள் வாழ்வின் ஒரு வேளையில், சந்தேகத்தைக் கையாள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவைகள் நமக்கு நேரிடும், பொருளாதாரப் போராட்டங்கள், உறவுமுறையில்*

*முரண்கள், உடல்நலப் பிரச்சனைகள் மற்றும் நாம் நேசிப்பவர்களின் மரணம் போன்ற வலுவான சோதனைகளினால் கொண்டுவரப்படுகின்றன. சந்தேகங்கள் நம்மை வியப்படையச் செய்யக்கூடாது; தூணுக்கு ஒப்பானவரான யோவான் ஸ்நானன்கூட, சிறையில் இருக்கும்போது சந்தேகங்களை எதிர்கொண்டார். நமது சந்தேகங்கள் பற்றி நாம் நேர்மையாக இருப்பதினாலும் அவற்றைக் கிறிஸ்துவினிடம் எடுத்துச் செல்வதினாலும் நாம் அவரது (யோவான் ஸ்நானனின்) உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். அவர் ஒருவரே அவற்றை நீக்க வல்லவராக இருக்கிறார். ஒருவேளை நாம், அசுத்த ஆவி பிடித்திருந்தவனுடைய தந்தையின் ஜெபத்தைக் கூற வேண்டியிருக்கும்: "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" (மாற்கு 9:24;* NIV*).*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Leon Morris, T*he Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 272. [2]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 158. [3]*"ஏரோதுவின் சந்தேகத்திற்குரிய குணத்தின்" காரணமாக மக்காரூஸ் கோட்டையிலேயே யோவான் மரணதண்டனை பெற்றார் என்று யோசிப்பஸ் குறிப்பிட்டார்.* (Josephus *Antiquities* 18.5.2.) [4]Michael J. Wilkins, "Matthew," *in Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 72; *காண்க* Josephus *Wars* 7.6.2. [5]*காண்க* Donald A. Hagner, *Matthew 1-13,* Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 300. [6]Morris, 277. [7]Josephus *Wars* 1.24.3. [8]*இயேசுவின் மேற்கோள் மல்கியா 3:1ன் தழுவலாக உள்ளது. "என்னை" ("கர்த்தரை" குறித்தல்) என்ற பிரதிப்பெயர்ச்சொல் "உம்மை" (அவரது மேசியாவை) என்று மாற்றப்பட்டுள்ளது.* [9]*காண்க மத்தேயு 5:19; 10:42; 18:1-4; 20:25-28; 25:40, 45.* [10]Lewis, 161.

[11]*காண்க சீராக் 48:1, 10; மிஷ்னா எடியோத் 8:7; சோட்டா 9:15 ஆகியவற்றைக் காணவும். சிலர் இயேசுவை எலியா என்று தவறாக அடையாளப்படுத்தினர் (16:14), மற்றவர்கள் இயேசு தமது சிலுவை மரணத்தின்போது எலியாவை அழைத்தார் என்று தவறாக நினைத்தனர் (27:46, 47).* [12]Josephus *Against Apion* 2.27. [13]*இயேசு அசுத்த ஆவி பிடித்தவர் என்றும் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டார் (9:34; 10:25; 12:24; யோவான் 7:20; 8:48, 52; 10:20).* [14]*வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்த திராட்சரசம் பற்றிய விபரத்திற்குக் காண்க* Duane F. Watson, "Wine," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 870-73. [15]Lewis, 163.